# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, விலங்குகள் (திருத்தச்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, மாச்சு மாதம் 20 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## *2009 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, விலங்குகள் (திருத்தச் ) சட்டம்*

[*2009 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச. வ. ஓ. 62/2006*

### *1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, விலங்குகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயர்.*

***1**. இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, விலங்குகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தில் 3அஅ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.*

***2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, விலங்குகள் சட்டம் அதன் 3அ என்னும் பிரிவினை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பிரிவினை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றதென்பதுடன் அது அம்முதன்மைச் சட்டவாக்கத்தின் 3அஅ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும் :-*

*"எவ்விலங்குகளுக் கெதிராக தவறுகள் புரியப்படு கின்றனவோ அவ்விலங்கு களின் பராமரிப்பு.*

*3அஅ. (1) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், விலங்கொன்று தொடர்பிலான தவறொன்று புரியப்பட்டிருக்குமிடத்தும் அத்தகைய தவறு தகுதி வாய்ந்த நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள நீதிவானின் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்ற விடத்தும், நீதிவான், வழக்கின் தீர்மானம் முடிவுறாதிருக்கையில், எவ்விலங்குக்கு எதிராக தவறுபுரியப்பட்டிருக்கின்றதோ அவ்விலங்கு –*

*(அ) வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட விலங்கு பராமரிப்பு நிலையத்தின் கட்டுக் காப்பிற்கு கையளிக்கப்படுதல் வேண்டுமென ;*

*(ஆ) விலங்குகள் நலச்சேவையை முதற்படியான குறிக்கோளாக உடைய ஏதேனும் அரசசார்பற்ற நிறுவனத்துக்கு கையளிக்கப்படுதல் வேண்டுமென ; அல்லது*

2-PL 003363 -1,125 (2009/04)

(இ) எவ்வாள் விலங்குகளுக்கான பராமரிப்பில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார் என நீதிமன்றம் திருப்திப்படுகின்றவிடத்து அவ் எவரேனும் ஆளின் கட்டுக்காப்பிற்குக் கையளிக்கப்படு தல் வேண்டுமென,

பயனுறும்வகையில் இடைக்காலக் கட்டளை ஒன்றை ஆக்கலாம்.

(2) வழக்கு நடவடிக்கைகளின் இறுதித்தீர்மானம் வரை அத்தகைய விலங்கைப் பராமரிப்பது விடயத்திற்கேற்றவாறு, அத்தகைய விலங்கு பராமரிப்பு நிலையம், அரசசார்பற்ற ஒழுங் கமைப்பு அல்லது அத்தகைய ஆளின் கடமை யாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தவறைப் புரிந்துள்ள ஆள் அத்தகைய தவறுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்படுகின்றவிடத்து, நீதிவான் அது தொடர்பில் விதிக்கக்கூடிய தண்டனைக்கு மேலதிகமாக –

(அ) விலங்கு பறிமுதல்செய்யப்படவேண்டுமென கட்டளையை ஆக்குதல் வேண்டும் ; அல்லது

(ஆ) விலங்குகளின் சொத்துவத்தை தாபிப்பதன் மேல் அத்துடன் உரிமையாளர், அவருடைய அறிவு அல்லது மறைமுக ஆதரவு இன்றி தவறுபுரியப்பட்டுள்ளது அல்லது புரியப்பட நாடப்பட்டுள்ளது என காரணம் காட்டு வதன்மேல், விலங்கு உரிமையாளருக்கு விலங்கு கையளிக்கப்படவேண்டுமென கட்டளையை ஆக்குதல் வேண்டும்.

(4) விலங்கு பறிமுதலுக்காக கட்டளையொன்று ஆக்கப்படுகின்றவிடத்து, நீதிவான், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட இடைக்காலக் கட்டளையை உறுதிசெய்தல் வேண்டுமென்பதுடன் (1) ஆம் உட்பிரிவின் முறையே (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட விலங்கு பராமரிப்பு நிலையத்திற்கு, அரச சார்பற்ற ஒழுங்கமைப்பிற்கு அல்லது ஆள் ஒருவருக்கு விலங்கின் கட்டுக்காப்பு அல்லது பராமரிப்பு கையளிக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்தலும் வேண்டும்.

(5) அமைச்சர் ஓராம் உட்பிரிவின் முறையே (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் விலங்கு பராமரிப்பு நிலையம், அரச சார்பற்ற ஒழுங்கமைப்பு அல்லது அத்தகைய ஆளினால் -

(அ) பேணப்பட வேண்டிய நியமங்களையும் ;

(ஆ) அங்கீகாரம் பெறுகின்ற முறையையும் (1)ஆம் உட்பிரிவின்முறையே (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் விலங்கு பராமரிப்பு நிலையம் அல்லது அரச சார்பற்ற ஒழுங்கமைப்பினை தாபிப்பதற்குப் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையையும் ; அத்துடன்

(இ) ஓராம் உட்பிரிவின் முறையே (அ), (ஆ) மற்றும் (இ) எனும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்படும் ஏதேனும் விலங்கு பராமரிப்பு நிலையம், அரச சார்பற்ற ஒழுங்கமைப்பு அல்லது அத்தகைய ஆளைக் கண்காணிப்பதற்கும் பரிசோதனை செய்வதற்குமான நடவடிக்கைமுறையையும்,

குறித்துரைக்கின்ற ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஈ என்னும் பிரிவினை மீள இலக்கமிடுதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஈ என்னும் பிரிவானது அப்பிரிவினை மீள இலக்கமிடுவதன்மூலம் அச்சட்டவாக்கத்தின் 3உ என்னும் பிரிவாக இத்தால் திருத்தப்படுகின்றது :-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஈ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்தல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3உ என்னும் பிரிவினை உடனடுத்து முன்னர் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 3ஈ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"II ஆம் பாகத்தின்கீழ் புரியப்பட்ட தவறுக்கான தண்டம்.

3ஈ. இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியொன்றை மீறுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றை புரிந்தவராதல் வேண்டும் என்பதுடன் அவர் நீதிவான் நீதிமன்றத்தினால் சுருக்கமுறையான விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது மூன்று ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதி ஒன்றிற்கான இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**5.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்